1981 ஜனவரி 27] *[பேரவைத் தலைவர்]*

சர்ச்சைக்குரிய பொருள் எதையும் கொண்டுவரக் கூடாது, எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது ' என்று நீங்கள்தான் எழுதி வைத்திருக்கிறீர்கள். நான் என்ன பண்ணுவது ?

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்மீது சொல்லப்பட்ட குற்றச்சாட்டிற்கு பதிலளிக்க விரும்பினால், அதைத் தன்னிலை விளக்கம் என்ற பெயராலே சொல்வதற்கு அனுமதிப்பது ஏற்றுக்கொள்ள கூடியதல்ல. ஒரு உறுப்பினர் சொன்ன கருத்திற்கு தன்னிலை விளக்கம் என்ற பெயரால் பதில் கூறி அந்தப் பிரச்னையை முடிப்பதென்பது நியாயமான முறையல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதே முறைதான் பார்லிமெண்டிலும் அனுமதிக்கப் பெற்றிருக்கிறது.

திரு. க. அன்பழகன் : தன்னிலை விளக்கத்திற்கு பதில் சொல்ல வேண்டிய அவசியம் யாருக்கும் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டில்கூட, அமைச்சர் இன்டர்வீன் பண்ணி தன்னிலை விளக்கம் கொடுத்தால் அதற்குப் பிறகு யாரையும் பேச அனுமதிப்பதில்லை.

4. அறிவிப்புகள்.

(அ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

5. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, ' தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு விற்பனை வரிச் சட்டங்கள் (திருத்தம், ரத்து) சட்ட முன்வடிவை '' பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிகம செய்யப் பெற்றிருக்கிறது.